செ.வெ.எண் : 18/ மே நாள் : 20.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி அரசு மருத்துவமனை மற்றும் கொரோனா பாதுகாப்பு மையங்களில்

## கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள்

## பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.முருகேசன் அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனை மற்றும் அரசு கலைக்கல்லூரியில் உள்ள கொரோனா பாதுகாப்பு மையம் ஆகிய இடங்களுக்கு கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.முருகேசன் அவர்கள் ஆகியோர் இன்று (20.05.2021) நேரில் சென்று கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து, மையத்தில் கொரோனா சிகிச்சை பெற்று வரும் நபர்களிடத்தில் கலந்துரையாடி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை மற்றும் உணவு குறித்து கேட்டறிந்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 2584 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 1837 பேர் அவர்களது சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 84,340 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றைய தினம், பரமக்குடி அரசு மருத்துவமனை மற்றும் அரசு கலைக்கல்லூரியில் உள்ள கொரோனா பாதுகாப்பு மையம் ஆகிய இடங்களுக்கு கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.முருகேசன் அவர்கள் ஆகியோர் நேரில் சென்று கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனை மற்றும் அரசு கலைக் கல்லூரியில் உள்ள கொரோனா பாதுகாப்பு மையம் ஆகிய இடங்களில் தலா 200 படுக்கைகள் வீதம் மொத்தம் 400 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. இதில் பரமக்குடி அரசு மருத்துவமனையில் தற்போது 57 நபர்களும், கொரோனா பாதுகாப்பு மையத்தில் 130 நபர்களும் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

ஆய்வினைத் தொடர்ந்து, கொரோனா சிகிச்சை பெறுவோருக்கு தேவையான சத்தான உணவு, சுத்தமான குடிநீர் வசதி, கபசுரக் குடிநீர் முறையே வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் எனவும், அவர்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, பரமக்குடி சுகாதாரத் துறை துணை இயக்குநர் திரு.இரவீந்திரன், பரமக்குடி அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவர் மரு.நாகநாதன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**